# December 19, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வளைகுடா நாடான ஓமன் தலைநகர் மஸ்கட்டில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அந்நாட்டு சுல்தான் ஹைதம் பின் தாரிக் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின் இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமானது.

    i. இந்த விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தின்படி (சிஇபிஏ), ஜவுளி, வேளாண், தோல் பொருள்கள் உள்பட இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் 98 சதவீத பொருள்களுக்கு ஓமன் தரப்பில் முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

    ii. அதேநேரம், ஓமனில் இருந்து இறக்குமதியாகும் பேரிச்சம்பழம், மார்பிள், பெட்ரோலியப் பொருள்கள் உள்பட 77.79 சதவீத பொருள்களுக்கு இந்தியா வரித் தளர்வு வழங்கியுள்ளது.

    iii. மேற்கண்ட ஒப்பந்தம் அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் அமலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

    iv. ஜோர்டான், எத்தியோப்பியா, ஓமன் ஆகிய மூன்று நாடுகள் அரசுமுறைப் பயணத்தின் இறுதிக் கட்டமாக, ஓமன் தலைநகர் மஸ்கட்டுக்கு பிரதமர் மோடி வந்தார். இரு நாட்டு ராஜீய உறவுகளின் 70 ஆண்டுகள் நிறைவையொட்டி அவர் மேற்கொண்ட இந்தப் பயணத்தில், ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக்கை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

    v. ஏற்றுமதி-இறக்குமதி மதிப்பு: இந்தியா-ஓமன் இருதரப்பு வர்த்தக மதிப்பு 10.5 பில்லியன் டாலராகும். இதில் ஏற்றுமதி 4 பில்லியன் டாலர் மற்றும் இறக்குமதி 6.54 பில்லியன் டாலர். ஓமனில் இருந்து பெட்ரோலியப் பொருள்கள் மற்றும் யூரியாவை இந்தியா அதிகம் இறக்குமதி (70 சதவீதத்துக்கு மேல்) செய்கிறது. பிற ரசாயனங்கள், இரும்பு- உருக்கு, அலுமினியம் போன்றவையும் இறக்குமதியாகின்றன.

    vi. இந்தியாவில் அதேநேரம், இருந்து கனிம எரிபொருள்கள், ரசாயனங்கள், மதிப்புமிக்க உலோகங்கள், தானியங்கள், கப்பல்கள், படகுகள், மிதவை கட்டமைப்புகள், மின்சார இயந்திரங்கள், கொதி கலன்கள், தேயிலை, காபி, மசாலாப் பொருள்கள், ஆடைகள், உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

2. எதிர்க்கட்சியினரின் கடும் எதிர்ப்புக்கு இடையே, 100 நாள் வேலைத் திட்டத்துக்கு மாற்றாக மத்திய அரசு கொண்டு வந்த வளர்ந்த பாரத ஊரக வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புத் திட்ட சட்ட மசோதா நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

    i. மக்களவையில் எதிர்க்கட்சி எம். பி.க்கள் கடும் அமளியில் ஈடுபட்டதோடு, மசோதா நகலைக் கிழித்தெறிந்து முழக்கங்களை எழுப்பினர்.

    ii. 2005-ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்ட சட்டம் நூறு

சதவீதம் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு மாற்றாக, புதிதாக 'பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புச் சட்ட மசோதாவை' (விபி-ஜி ராம் ஜி) மத்திய அரசு கொண்டுவந்தது.

iii. திட்டத்துக்கான நிதிச் சுமையை மாநில அரசுகளுடன் 60-40 என்ற சதவீதத்தில் மத்திய அரசு பகிர்ந்துகொள்ளும் வகையில் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இதுவரை 100 நாள்களாக இருந்த வேலை நாள்கள், இனி 125 நாள்களாக உயர்த்தப்பட உள்ளது.

3. சூடானில் ராணுவத்துடன் மோதலில் ஈடுபட்டுள்ள ஆர்எஸ்எஃப் துணை ராணுவப் படையினர் ஜம்ஜம் புலம்பெயர்ந்தோர் முகாமில் கடந்த ஏப்ரல் மாதம் நடத்திய தாக்குதலில் 1,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

   i. ராணுவ தலைமைத் தளபதி அல்-புர்ஹானுக்கும் எஃப் துணை ராணுவப் படைத் தலைவர் முகமது ஹம்தான் டகேலோவுக்கும் இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டி காரணமாக, இரு தரப்பினருக்கும் இடையே கடந்த 2023 ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் கடுமையான சண்டை நடந்துவருகிறது. இதில் இதுவரை லட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்திருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

4. தைவானுக்கு சுமார் 1,115 கோடி டாலர் (சுமார் ரூ.1 லட்சம் கோடி) மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்யவிருப்பதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

   i. தைவானுக்கு நடுத்தர தொலைவு ஏவுகணைகள், ஹோவிட்சர் பீரங்கிகள், ட்ரோன்கள் உள்ளிட்ட ராணுவ தளவாடங்களை விற்பனை செய்வதற்காக 8 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

   ii. தைவானை தனது நாட்டின் அங்கமாகக் கூறிவரும் சீனா, இந்த ஒப்பந்தங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அமெரிக்கா- சீனா உறவுகளில் இது புதிய பதற்றத்தை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது.

5. உலகின் மிக உயரமான சிலையான குஜராத்தின் 'ஒற்றுமைச் சிலையை வடிவமைத்த புகழ்பெற்ற சிற்பி ராம் வஞ்சி சுதார் (100), வயது மூப்பு காரணமான உடல்நலக் குறைவால் நொய்டாவில் உள்ள அவரது இல்லத்தில் நள்ளிரவு காலமானார்.

   i. நாட்டின் முதல் உள்துறை அமைச்சர் சர்தார் வல்லப்பாய் படேலை கௌரவிக்கும் வகையில் குஜராத்தில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிக உயரமான 'ஒற்றுமைச் சிலை', நாடாளுமன்ற வளாகத்தில் தியான நிலையில் அமர்ந்திருக்கும் மகாத்மா காந்தியின் சிலை மற்றும் குதிரை மீது அமர்ந்திருக்கும் சத்ரபதி சிவாஜியின் கம்பீர சிலை ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

ii. இவரது கலைப் பணியைப் பாராட்டி, மத்திய அரசு 1999-இல் 'பத்மஸ்ரீ விருதும், 2016-இல் 'பத்ம பூஷண்' விருதும் வழங்கி கௌரவித்தது.

6. கர்நாடக சட்டப் பேரவையில் பாஜகவின் கடும் எதிர்ப்புக்கு இடையில், வெறுப்புக் கருத்து தடைச்சட்ட மசோதா நிறை வேற்றப்பட்டது.

7. அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் சட்டமசோதா மாநிலங்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

8. பிரதமர், முதல்வர்கள், அமைச்சர்களைப் பதவி நீக்க வழிவகுப்பதற்கான மசோதாவை ஆய்வு செய்யும் நாடாளுமன்றக் கூட்டுக் குழு தங்கள் அறிக்கையை தாக்கல் செய்ய கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

i. இதன்படி நாடாளுமன்ற நிலைக் குழு அடுத்த ஆண்டு நடைபெறும் பட்ஜெட் கூட்டத் தொடரின் இறுதி வாரத்தில் தனது அறிக்கையைத் தாக்கல் செய்ய கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக ஏப்ரல் முதல் வாரத்தில் பட்ஜெட் கூட்டத்தொடர் நிறைவடையும்.

ii. இப்போதைய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-இன் கீழ் 2 ஆண்டுகளுக்கு குறையாமல் சிறைத் தண்டனை பெற்றால், தண்டனைக் காலம் மற்றும் அதற்குப் பிறகு 6 ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம், மாநிலப் பேரவையில் உறுப்பினராக முடியாதபடி தகுதி நீக்கம் செய்யப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

9. வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலில் பெரிய ஏற்றுமதி நாடு ஓமன். மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவுக்கான இந்திய பொருள்கள்-சேவைக்கு ஓமன் நுழைவாயிலாக விளங்குகிறது. இந்நாட்டில் இந்திய வர்த்தக குடும்பங்கள் உள்பட 7 லட்சத்துக்கும் மேல் இந்தியர்கள் வசிக்கின்றனர். பல்வேறு துறைகளில் 6,000-க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஓமனில் உள்ள இந்தியர்கள் தாய்நாட்டுக்கு அனுப்பும் பணம் 2 பில்லியன் டாலராகும் (ரூ.18,050 கோடி).

i. ஐக்கிய அரபு அமீரகம்-இந்தியா இடையே கடந்த 2022-இல் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அமலான நிலையில், GCC-யில் 2-ஆவது நாடாக ஓமனுடன் ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

ii. 20 ஆண்டுகளுக்குப் பின்: கடந்த 2006- இல் அமெரிக்கா உடனான ஒப்பந்தத்துக்குப் பிறகு தற்போது முதல் முறையாக இந்தியாவுடன் ஓமன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அண்மைக் காலங்களில் பிரிட்டன் (2025), ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பு (2024), ஆஸ்திரேலியா (2022), மோரீஷஸ் (2021) ஆகிய நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டது.

ஒப்பந்தத்தின் சிறப்பம்சங்கள்

i. 98 சதவீத இந்திய ஏற்றுமதி பொருள்களுக்கு (மதிப்பு அடிப்படையில் 99.38%) முழு வரி விலக்கு; 77.79 சதவீத ஓமன் இறக்குமதி பொருள்களுக்கு (மதிப்பு

*அடிப்படையில் 94.81%) வரித் தளர்வு.*

ii. *இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும் ரத்தினங்கள்-நகைகள், ஜவுளி, தோல் பொருள்கள், காலணிகள், விளையாட்டுப் பொருள்கள், பிளாஸ்டிக், மரச்சாமான்கள், வேளாண் பொருள்கள், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், வாகனங்களுக்கு முழு வரி விலக்கு (இந்தப் பொருள்கள் தற்போது 5 முதல் 100 சதவீத வரி விதிப்பில் உள்ளன).ஓமனில்*

*இந்திய ஆயுஷ் துறைக்கு சந்தை அனுமதி*

i. *ஓமனில் திறன்மிகு வெளிநாட்டுப் பணியாளர்கள் பணியமர்த்தப்படுவதில் இந்தியாவுக்கான இட ஒதுக்கீடு 20-இல் இருந்து 50 சதவீதமாக உயர்வு.*

ii. *ஒப்பந்த அடிப்படையில் சேவை வழங்குவோர் தங்கும் காலவரம்பை 90 நாள்களில் இருந்து 2 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் நீட்டிக்க வழிவகை.*

iii. *கணக்கியல், வரி விதிப்பு, கட்டுமானம், மருத்துவம் போன்ற துறைகளில் திறன்மிக்க பணியாளர்களின் நுழைவு-தங்கும் நிபந்தனைகளில் கூடுதல் தளர்வு. முக்கிய சேவைத் துறைகளில் இந்திய நிறுவனங்களுக்கு 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி.*

iv. *ஓமனில் இருந்து மார்பிள் இறக்குமதி செய்ய இந்திய நிறுவனங்களுக்கு அனுமதி.*

v. *வரி விலக்குடன் ஆண்டுக்கு 2,000 டன் பேரிச்சம்பழம் இறக்குமதி.*

*வேளாண் பொருள்களுக்கு வரிச் சலுகை கிடையாது*

- *பால் பொருள்கள், தேயிலை, காபி, ரப்பர் உள்பட வேளாண் பொருள்கள், சாக்லேட், தங்கம்-வெள்ளி நகைகள், காலணி, விளையாட்டுப் பொருள்கள், உலோகக் கழிவுகள் உள்ளிட்ட முக்கியப் பிரிவுகளில் ஓமன் இறக்குமதி பொருள்களுக்கு எந்த வரிச் சலுகையும் வழங்கப்படவில்லை; இதன்மூலம் இந்திய விவசாயிகள் மற்றும் சிறு தொழில் துறையினரின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.*